# பெரியோர் ஓய்வுநாட் பள்ளிப் பாடங்கள்

மூன்றாம் காலாண்டு, 2024

# மாற்கு எழுதின சுவிசேஷம்


1 சுவிசேஷத்தின் துவக்கம் (ஜூன் 29–ஜூலை 5) ........ 5

2 இயேசுவின் ஊழியத்தில் ஒரு நாள் (ஜூலை 6–12 ........ 13

3 சர்ச்சைகள் (ஜூலை 13–19) ........ 21

4 உவமைகள் (ஜூலை 20–26) ........ 29

5 கடலருகே அற்புதங்கள் (ஜூலை 27–ஆகஸ்ட் 2) ........ 37

6 உள்ளேயிருந்து புறப்படுகிறவைகள் (ஆகஸ்ட் 3–9 ) ........ 45

7 சீடர்களுக்குப் போதித்தல்: பகுதி 1 (ஆகஸ்ட் 10–16) ........ 53

8 சீடர்களுக்குப் போதித்தல்: பகுதி 2 (ஆகஸ்ட் 17–23) ........ 61

9 எருசலேம் சர்ச்சைகள் (ஆகஸ்ட் 24–30) ........ 69

10 இறுதி நாட்கள் (ஆகஸ்ட் 31 – செப்டம்பர் 6) ........ 77

11 கைதும் விசாரணையும் (செப்டம்பர் 7–13) ........ 85

12 விசாரணை, சிலுவையில் அறையப்படுதல் (செப்டம்பர் 14–20) ........ 93

13 உயிர்த்தெழுந்த கர்த்தர் (செப்டம்பர் 21–27) ........ 101



பாட ஆசிரியர்

தாமஸ் ஆர். ஷெப்பர்ட்

தமிழாக்கம்: மார்சல் ஐசக், எஸ்றா டேவிட்



**தென்கிழக்கு இந்திய ஒன்றியம்**

**செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் திருச்சபை**

197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர்,

**சென்னை – 600 048**

# மாற்கு எழுதின சுவிசேஷம்



மாற்குவின் முதல் வசனமே இயேசு யாரென வாசகருக்குச் சொல்லுகிறது - அவர் தேவகுமாரனாகிய மேசியா. மாற்கு 1:1. ஆனால் அதன் சம்பவங்களில் வருகிற நபர்கள் அவர் யார், அவர் நோக்கம் என்ன என்பதைப் புரிந்துகொள்ளத் திண்டாடினார்கள்; ஆனால் பிசாசு பிடித்திருந்தவர்களுக்கு அந்தக் கேள்வி எழவில்லை. அவர் யாரென்று சரியாக அறிந்திருந்தார்கள்! பிசாசுகள் அவரை அடையாளம் கண்டுகொண்டன; அவரது மகத்துவமான வார்த்தைகளுக்கு முன்பாக நடுங்கின.

ஆனால் இயேசுவோ அவைகளிடம் அந்தச் செய்தியை இரகசியமாக வைக்கும்படி கட்டளையிட்டார். ஏன்? பல நூற்றாண்டுகளாக வேதாகம மாணவர்கள் இதுகுறித்து யோசித்து வருகிறார்கள். அறிஞர்கள் இதற்கு ஒரு பெயரும் வைத்திருக்கிறார்கள்; அது மேசியத்துவ இரகசியம். இயேசு யாரென்பதுபற்றி அமைதிகாக்க ஒரு சுவிசேஷப் புத்தகம் ஏன் சொல்லவேண்டும்?

மாற்கு எழுதின சுவிசேஷத்தைப்பற்றின இந்த ஆராய்ச்சிப் பயணத்தில், இந்தப் புத்தகத்தில் இரகசியம் இருப்பது மட்டுமல்ல, அற்புமான வெளிப்பாடு இருப்பதும் தெளிவாகப் போகிறது. வெளிப்படுத்தலும் இரகசியமும் கலந்த கருத்து அது என்று சொன்னால் சரியாக இருக்கும்; அது மாற்கு எழுதின சுவிசேஷம் முழுவதிலும் காணப்படுகிறது. ஆனாலும் அந்தப் புத்தகத்தின் முடிவில், இயேசுவைப் பற்றின வல்லமையான வெளிப்பாட்டால் இரகசியம் அனைத்தும் ஆச்சரியமான விதத்தில் வெளியரங்கமாகிறது.

மாற்கு புத்தகத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாம் அதிகாரத்திலிருந்து எட்டாம் அதிகாரத்தின் முடிவுவரை "இயேசு யார்?" என்கிற முக்கியக் கேள்விபற்றிப் பேசப்படுகிறது. அதற்கான பதில் அவருடைய போதனைகளிலும் அற்புதங்களிலும் வெளிப்படுகிறது. அவர் மீண்டும்மீண்டும் தீமையைத் தோற்கடிக்கிறார்; ஒடுக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கை தருகிறார்; மனித வாழ்வின் மையமான முக்கியச் சத்தியங்களைப் போதிக்கிறார். எபிரெயர்கள் வெகுகாலமாகக் காத்திருந்த மேசியாவாகிய கிறிஸ்து அவர்தாம் என்று இவை எல்லாமே உரக்கச் சொல்கின்றன.

ஆனாலும், அந்தப் புத்தகத்தின் நடுப்பகுதியில்தான் பிசாசு பிடிக்காத ஒருவர் அவர் யாரென்று சரியாகச் சொல்லுகிறார்; கிறிஸ்துவின் அடையாளம்பற்றி அந்தப் புத்தகத்தின் முதல் பாகம் கேட்கிற கேள்விக்குப் பதிலளிக்கிறார். அந்த நபர் பேதுரு. "நீர் கிறிஸ்து" என்று சொல்கிறார். மாற்கு 8:29.

மாற்கு புத்தகத்தின் இரண்டாம் பாதியில், மாற்கு 8:31 முதல் அப்புத்தகத்தின் முடிவு வரையிலும், "இயேசு எங்கே செல்கிறார்?" என்கிற கேள்விக்குப்

பதிலளிக்கப்படுகிறது. பதில் சற்று அதிர்ச்சியாக இருக்கிறது. அவர் சிலுவைக்குச் செல்கிறார்; ரோம உலகில் அது மிகவும் இழிவான ஒரு மரணம். மேசியாவுக்கு அப்படி நடக்குமென யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்; ரோமர்களைத் தோற்கடித்து, இஸ்ரவேலை வல்லமையான ஒரு தேசமாக மாற்றுவாரென அவரைப் பின்பற்றினவர்கள் நினைத்தார்கள்.

குழப்பத்திலிருந்த அவரது சீடர்களால் இயேசு சொன்னதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்தப் புத்தகத்தில் தொடர்ந்து, இந்தக் காரியம்குறித்து அவரிடம் கேட்பதைக் குறைக்கிறார்கள்; இறுதியாக, அவர்கள் விரும்பாத அந்த உண்மை நிறைவேறியபோது, முற்றிலும் அமைதியாகிவிடுகிறார்கள். நம் இரட்சிப்புக்கு விலையாக, கிறிஸ்து அனுபவித்த இருளான அனுபவத்தை மாற்கு எழுதின சுவிசேஷம் காட்டுகிறது.

தம்மை அழிக்க சதித்திட்டம் தீட்டிய மதத்தலைவர்களை இயேசு எதிர்கொண்டபோது, சூழ்நிலைகள் மேலும் அந்தகாரமடைகின்றன. மகிமையான ராஜ்யத்தின் கனவில் இருந்த சீடர்கள், இயேசு கைதுசெய்யப்பட்டு, மரித்தபோது திகைத்தார்கள்; அவர்களுடைய எதிர்பார்ப்புகள் நொறுங்கிப்போயின.

ஆனால் இவை அனைத்தின் ஊடேயும், தாம் செல்கிற இடம்பற்றியும், தம் மரணம்-உயிர்த்தெழுதலின் அர்த்தம்பற்றியும் இயேசு ஒரு தெளிவான செய்தியைத் தெரிவித்தார். கடைசித் திருவிருந்தின் அப்பமும் பாத்திரமும் அவரது சரீரத்தையும் இரத்தத்தையும் சுட்டிக்காட்ட இருந்தன. மாற்கு 14:22-25. அநேகரை மீட்கும்பொருளாக அவர் மாற இருந்தார். மாற்கு 10:45.

அதற்காக எவ்வித உணர்ச்சியுமின்றி அவர் சிலுவையை எதிர்கொண்டார் என்று அர்த்தமில்லை. அந்தத் தீர்மானத்தைச் செய்ய கெத்செமனேயில் போராடுகிறார். மாற்கு 14:32-42. மனமுடைந்தவராக, ‘‘என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்’’ என்று சிலுவையில் கதறுகிறார். மாற்கு 15:34. மாற்கு எழுதின சுவிசேஷமானது, நமது இரட்சிப்பிற்கு விலையாக கிறிஸ்து அனுபவித்த அந்தகார நிலையைக் காட்டுகிறது. ஆனால் சிலுவை அப்பயணத்தின் முடிவாக இருக்கவில்லை. அவர் உயிர்த்தெழுந்தபிறகு, கலிலேயாவில் தம் சீடர்களைச் சந்தித்தார். அவ்வாறுதான் கிறிஸ்தவ சபை உருவானது.

**மாற்கு எழுதின சுவிசேஷமானது, நமது இரட்சிப்பிற்கு விலையாக கிறிஸ்து அனுபவித்த அந்தகார நிலையைக் காட்டுகிறது.**

இரத்தினச் சுருக்கமாக, ஆனால் வேகமாக நகருகிற பரபரப்பான சம்பவம்; புத்தகத்தின் ஆசிரியர் அதிக விளக்கம் எதுவும் கொடுக்கவில்லை. அவர் சம்பவத்தைச் சொல்லிவிட்டு, நாசரேத்தின் இயேசுவினுடைய வாழ்க்கையையும் மரணத்தையும்பற்றி வார்த்தைகளும் செயல்களும் நடவடிக்கைகளுமே பேச அனுமதிக்கிறார்.

**தாமஸ் ஆர். ஷெப்பர்ட், பிஎச்டி, டிஆர்பிஎச் அவர்கள், ஆன்ட்ரூஸ் பல்கலைக் கழகத்தின் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் வேதாகமக் கல்லூரியில் புதிய ஏற்பாட்டின் தலைமை ஆராய்ச்சிப் பேராசிரியராக இருக்கிறார். அவருக்கும் அவரது மனைவி ஷெர்ரிக்கும் இரண்டு பிள்ளைகளும், ஐந்து பேரப்பிள்ளைகளும் உள்ளனர்.**

# மனன வசனங்கள்

1 யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார். மாற்கு 1:14,15.

2 இயேசு அவர்களை நோக்கி: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். மாற்கு 1:17.

3 பின்பு அவர்களை நோக்கி: மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது; ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றார். மாற்கு 2:27,28.

4 பின்னும் அவர் அவர்களைநோக்கி: நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள்; எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்; கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும். உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனெவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும் என்றார். மாற்கு 4:24,25.

5 இயேசு அவனுக்கு உத்தரவுகொடாமல்: நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப் போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார். மாற்கு 5:19.

7 மனுஷனுக்குப் புறம்பே இருந்து அவனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமாட்டாது; அவன் உள்ளத்திலிருந்து புறப்படுகிறவைகளே அவனைத் தீட்டுப்படுத்தும். மாற்கு 7:15.

7 ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். மாற்கு 8:34.

8 அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார். மாற்கு 10:45.

9 நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். மாற்கு 11:25.

10 அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின்மேல் வருகிறதைக் காண்பார்கள். அப்பொழுது அவர் தம்முடைய தூதரை அனுப்பி, தாம் தெரிந்துகொண்டவர்களை பூமியின் கடைமுனை முதற்கொண்டு வானத்தின் கடைமுனைமட்டுமுள்ள நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார். மாற்கு 13:26,27.

11 அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது என்றார். மாற்கு 14:36.

12 ஒன்பதாம்மணி நேரத்திலே, இயேசு: எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு: என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம். மாற்கு 15:34.

13 அவன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள், சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்தார்; அவர் இங்கேயில்லை; இதோ, அவரை வைத்த இடம் (என்றான்). மாற்கு 16:6.



**பாடம் 1** **ஜூன் 29-ஜூலை 5**

# சுவிசேஷத்தின் துவக்கம்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** அப்போஸ்தலர் 13:1–5, 13; 15:36–39; மாற்கு 1:1–15; ஏசா 40:3; தானியேல் 9:24–27.

**மனன வசனம்:** 'யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்'. மாற்கு 1:14,15.

மாற்கு சுவிசேஷத்தை எழுதியவர் யார்? அது ஏன் எழுதப்பட்டது? எந்தச் சுவிசேஷமும் அதன் ஆசிரியரின் பெயரைச் சொல்லவில்லை. யோவானில் கிட்டத்தட்ட ஆசிரியரின் பெயர் வருகிறது; இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் என்கிற குறிப்பு உள்ளது. யோவான் 21:20,24.

ஆனாலும், ஆரம்பக்காலம் முதலே, வேதாமக சுவிசேஷப் புத்தகங்கள் ஒவ்வொன்றும் ஏதாவது அப்போஸ்தலருடன் (மத்தேயு, யோவான்) அல்லது அப்போஸ்தலருடனிருந்த ஒருவருடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. உதாரண மாக, லூக்காவின் சுவிசேஷம் பவுலுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. கொலோ 4:14; 2தீமோ 4:11; பிலே 1:24. மாற்குவின் சுவிசேஷம் பேதுருவுடன் தொடர்பு படுத்தப்படுகிறது. 1பேதுரு 5:13.

மாற்குவின் ஆசிரியர் வசனத்தில் தன் பெயரைக் குறிப்பிடாவிட்டாலும், ஆரம்பக்காலப் பாரம்பரியத்தின்படி, மாற்கு சுவிசேஷத்தினுடைய ஆசிரியர் யோவான் மாற்கு என்பது தெரியவருகிறது; இவர், பவுல் மற்றும் பர்னபாவுடன் பயணம்செய்தவர். அப் 13:2,5. பிறகு பேதுருவுக்குத் துணையாக இருந்தவர். 1பேதுரு 5:13.

முதல் வேலையாக, மாற்குபற்றி வேதாகமம் சொல்வதை இந்த வாரத்தில் படிப்போம்; அவர் ஆரம்பத்தில் தோற்று, பின்னர் வெற்றிப் பாதைக்குத் திரும் பியவர். பிறகு நமது ஆராய்ச்சியில், மாற்கு சுவிசேஷம் எதை நோக்கிச் செல்கிற தென்றும், தோற்று, பிறகு மனந்திரும்பிய ஓர் ஊழியப்பணியாளர் ஏன் இப்படி யொரு புத்தகத்தை எழுதவேண்டுமென்றும் பார்ப்போம்.

*2024 ஜூலை 6 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# தோற்றுப்போன ஊழியர்

**அப்போஸ்தலர் புத்தகத்தில் மாற்கு எவ்வாறு அறிமுகப்படுத்தப்படுகிறார்? அப் 12:12.**

---

யோவான் மாற்குதான் மாற்கு சுவிசேஷத்தை எழுதியிருக்க வேண்டும்; அநேகமாககி.பி.40களின்மத்தியில்அப்போஸ்தலர்12இன்நிகழ்வுகளின்போது, அவர் ஒரு இளைஞர். அவரது தாயின் பெயர் மரியாள் என்று வசனம் 12 சொல்லுகிறது. மரியாள் வசதிபடைத்தவர்; சபையை ஆதரித்தார்; தன் வீட்டில் ஜெபக் கூட்டங்கள் நடத்தினார்; அப்போஸ்தலர் 12 இன் பிரபலமான நிகழ்வு அங்குதான் நிகழ்கிறது. சிறையிலிருந்து பேதுரு தப்பியதும், அதைத் தொடர்ந்த நிகழ்வுகளும், பிறகு ஏரோது மரித்ததும் நகைச்சுவையாக உள்ளன; பேதுருவையும் அந்த ராஜாவையும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. இந்தச் சம்பவத்தில் மாற்குவுக்கு பங்கேதும் இல்லை என்றாலும், இந்தக் கட்டத்தில் அவர் அறிமுகம் செய்யப்படுவது பர்னபாவோடும் சவுலோடும் அவர் பின்னர் சேரவிருந்ததற்கு முன்னுரையாக அமைகிறது.

**சவுலோடும் பர்னபாவோடும் மாற்கு எவ்வாறு சேருகிறார்? பிறகு என்னவாகிறது? அப் 13:1-5, 13.**

---

சுமார் கி.பி. 46இல் பவுல்-பர்னபாவின் முதல் ஊழியப்பயணம்பற்றி அப்போஸ்தலர் 13 விவரிக்கிறது. இது கி.பி. 46 இல் துவங்கினது. 5ம் வசனத்தில்தான் மாற்குபற்றிச் சொல்லப்படுகிறது; அவர் உதவியாளாக அல்லது வேலையாளாக இருந்திருக்கிறார். பிறகு 13ம் வசனத்தில்தான் அவர்பற்றி வருகிறது; அங்கே அவர் எருசலேமுக்கு திரும்பிச் சென்றுவிட்டதாகமட்டும் சொல்லப்படுகிறது.

அவர் திரும்பிச் சென்றதற்கு எந்தக் காரணமும் சொல்லப்படவில்லை; அவரது உணர்வுகள்குறித்த குறிப்புகளும் இல்லை; அதனால் ஊழியப்பணியிலிருந்து அவர் ஏன் பின்வாங்கியிருக்கலாமென ஊகிக்கத்தான் முடிகிறது; ஆனால் நிச்சயம் ஆபத்தையும் சவால்களையும் சந்தித்திருப்பார் என்பதில் மட்டும் சந்தேகமில்லை. எலன் ஒய்ட் இவ்வாறு கூறுகிறார்: 'பயமும் அதைரியமும் அதிகரித்த நிலையில், கர்த்தருடைய பணிக்காக முழுமனதுடன் தன்னை அர்ப்பணிப்பதிலிருந்து மாற்கு சற்றே தடுமாறினார். கஷ்டங்களுக்குப் பழக்கப்பட்டிராத நிலையில், பாதையில் காணப்பட்ட ஆபத்துகளாலும் தனிமை அனுபவங்களாலும் மனமுடைந்து போனார்'.[1] சுருக்கமாக, சூழ்நிலைகள் மிகவும் கடினமானதால், வெளியேற விரும்பினார்.

[1] The Acts of the Apostles, p. 169.

---

**உங்கள் கிறிஸ்தவ அனுபவத்தில் நீங்கள் பின்வாங்கிய அல்லது முற்றிலும் தோற்ற ஏதாவது அனுபவத்தை யோசித்துப் பாருங்கள். அந்த அனுபவத்திலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?**

# இரண்டாவது வாய்ப்பு

**பவுல் ஏன் யோவான் மாற்குவைப் புறக்கணித்தார், பர்னபா ஏன் அவருக்கு இரண்டாம் வாய்ப்பு கொடுத்தார்? அப் 15:36-39.**

---

அந்த இளைஞரை பவுல் பிரிந்ததற்கான காரணம் அப் 15:38இல் உள்ளது. மாற்கு ஊழியப்பணியைச் செய்யாமல் அவர்களைவிட்டுப் பிரிந்துசென்றுவிட்டார். பவுல் சற்றே கடினமாக நடந்தாலும்கூட, அவர் கோபத்திற்கு காரணம் புரிகிறது. ஊழியர்கள், அதுவும் பண்டைய நாட்களில், மிகுந்த கஷ்டத்தோடும் சிரத்தையோடும்தான் ஊழியம் செய்யவேண்டியிருந்தது. 2கொரி 11:23-28. ஊழியத்தாலும் சூழ்நிலைகளாலும் எழுந்த சவால்களைச் சமாளிக்க சக ஊழியர்களின் உதவி பவுலுக்குத் தேவைப்பட்டது. அவரைப் பொறுத்தவரையில், அவ்வளவு சீக்கிரத்தில் பின்வாங்குகிற ஒருவர், தீமையின் வல்லமைகளோடு கைகோர்த்துப் போரிடுகிற ஊழியர்களின் அணியில் இடம்பெற தகுதியற்றவரெனக் கருதினார்.

பர்னபா அதற்கு உடன்படவில்லை. மாற்குவிடம் திறமை இருப்பதைக் கண்டதால், அந்த இளைஞரை விடவிரும்பவில்லை. யோவான் மாற்குவின் நிமித்தம் இருவருக்கும் இடையே மிகப்பெரிய சச்சரவு உண்டாகவே, ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்தார்கள். பவுல் தன்னுடன் சீலாவைச் சேர்த்துக்கொண்டார்; பர்ன பாவோ மாற்குவைச் சேர்த்துக்கொண்டார்.

பர்னபா ஏன் மாற்குவை ஏன் தன்னுடன் அழைத்துச் செல்லத் தீர்மானித்தாரென அப்போஸ்தல நடபடிகள் விளக்கவில்லை. உண்மையில், இந்த வசனத்தில்மட்டுமே அந்த இருவரையும்பற்றி கடைசியாகப் பார்க்கிறோம். ஆனால் புதிய ஏற்பாட்டில் மாற்குவைப்பற்றி கடைசியாகப் பார்ப்பது இங்கு இல்லை என்பது சுவாரஸ்யமானது.

**மாற்கு மீண்டும் ஊழியப்பாதைக்குத் திரும்பினது பற்றி பின்வரும் வசனங்கள் சொல்லுகிற விபரங்கள் என்ன? கொலோ 4:10; 2தீமோ 4:11; பிலே 24; 1பேதுரு 5:13.**

---

மாற்குவில் அற்புதமான ஒரு மாற்றம் நிகழ்ந்தது தெரிகிறது. இந்த வசனங்களில், தனக்கும் ஊழியத்திற்கும் மாற்கு எவ்வளவு முக்கியமென பவுல் சுட்டிக்காட்டுகிறார். அவரை தனது சக ஊழியர்களில் ஒருவராகக் கருதுகிறார்; தீமோத்தேயுவிடம் மாற்குவை அழைத்துவரச் சொல்லுகிறார். பேதுருவுக்கும் மாற்குவுடன் நல்ல உறவு இருந்ததை 1பேதுரு குறிப்பிடுகிறது. பவுல் மற்றும் பேதுருவின் இந்தப் புத்தகங்கள், கி.பி. 60களின் துவக்கத்தில், அப்போஸ்தலர் 15ல் உள்ள அனுபவத்திற்குப்பிறகு சுமார் 15-20 ஆண்டுகள் கழித்து எழுதப்பட்டவை. மாற்கு தனது தோல்வியிலிருந்து நிச்சயமாகவே வெற்றிபெற்றார்; அவரது உறவினரான பர்னபா அவர்மீது வைத்திருந்த நம்பிக்கை அதற்கு உதவியது.

---

**நீங்களோ உங்கள் நண்பரோ தோற்று, உங்களுக்கு இரண்டாவது வாய்ப்பு கிடைத்த ஒரு அனுபவத்தை யோசியுங்கள். அந்த அனுபவம் உங்களையும் உங்களுக்கு உதவினவர்களையும் எவ்வாறு மாற்றியது? மற்றவர்களுக்கு நீங்கள் செய்கிற ஊழியத்தை அது எப்படி மாற்றியது?**

## தூதுவர்

**மாற்கு 1:1-8 வசனங்களில் வருகிற நபர்கள் யார்? அவர்கள் என்ன சொல்கிறார்கள்? என்ன செய்கிறார்கள்?**

இந்த வசனங்களில் மூன்று முக்கிய நபர்கள் வருகிறார்கள்: இயேசுகிறிஸ்து. மாற்கு 1:1. பிதாவாகிய தேவன். மாற்கு 1:2. யோவான் ஸ்நானன். தூதுவரும் பிரசங்கியுமான ஸ்நானனைப் பற்றித்தான் இந்த வசனங்களின் கடைசிப்பகுதி முக்கியமாகப் பேசுகிறது.

நடக்கப் போவதை விவரிக்கிற வகையில் பழைய ஏற்பாட்டிலிருந்து ஒரு மேற்கோளை மாற்கு 1:2,3ல் மாற்கு பயன்படுத்துகிறார். மேற்கோளாக மாற்கு பயன்படுத்துகிற வார்த்தைகள் மூன்று வேதப்பகுதிகளிலிருந்து எடுக்கப் பட்டவை: யாத் 23:20; ஏசா 40:3; மல் 3:1.

**இந்த வசனங்களின் பொதுவான செய்தி என்ன?**

இஸ்ரவேலர்களை கானானுக்குக் கொண்டுசேர்க்க தேவன் அனுப்பின ஒரு தூதனைப்பற்றி யாத்திராகமம் 23:20 பேசுகிறது. வனாந்தரத்தில் தமக்குமுன் ஒரு பாதை ஆயத்தமாக்கப்பட்ட நிலையில் தேவன் வருவதைக்குறித்து ஏசாயா 40:3 பேசகிறது. கர்த்தருடைய வழியை ஆயத்தப்படுத்த அவருக்கு முன்பாக ஒரு தூதன் செல்வதைப்பற்றி மல்கியா 3:1 பேசுகிறது. இந்த மூன்று வேதப்பகுதி களும் ஒரு பயணத்தைப்பற்றிப் பேசுகின்றன.

ஏசாயாவிலுள்ள வசனங்கள் யோவான் ஸ்நானனுடைய ஊழியத்துடன் பலவகைகளில் தொடர்புடையவை; கர்த்தருக்கு வழி உண்டாக்குவது குறித்து முக்கியமாகப் பேசுகின்றன. மாற்கு எழுதின சுவிசேஷத்தில், கர்த்தராகிய இயேசு ஒரு பயணத்தை மேற்கொள்கிறார். விறுவிறுவென நகருகிற வருணனை, அந்தப் பயணம்பற்றி அதிகம் உணர்த்துகிறது; அது சிலுவையையும், நமக்காக அவர் பலியாக மரிப்பதையும் நோக்கின பயணமாக இருக்கிறது.

ஆனால் அவர் சிலுவையை அடைவதற்குமுன் பல சம்பவங்கள் நிகழ்கின் றன. அந்தப் பயணம் ஒரு ஆரம்பம்தான்; அதுகுறித்த அனைத்தையும் மாற்கு சொல்கிறார்.

மாற்கு 1:2,3இலுள்ள பழைய ஏற்பாட்டு மேற்கோளின்படி, மனந்திரும்பு மாறும், பாவத்திலிருந்து விலகுமாறும், தேவனிடம் மீண்டும் திரும்பி வருமாறும் மக்களை யோவான் ஸ்நானன் அழைக்கிறார். மாற்கு 1:4. பண்டையகால எலியா தீர்க்கதரிசிபோல உடையணிந்து (2இராஜா 1:8), தன்னைவிட பெரியவரான ஒருவர் தனக்குப்பின் வரவிருந்ததுபற்றி மாற்கு 1:7,8இல் கூறுகிறார். அவரு டைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் தான் பாத்திரன் அல்லவென்று அவர் சொன்னது, இயேசுவை எவ்வளவு மேன்மையாகப் பார்த் தாரெனக் காட்டுகிறது.

# இயேசுவின் ஞானஸ்நானம்

**இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தது யார்? அப்போது என்ன நடந்தது? மாற்கு 1:9-13.**

யோர்தான் நதியில் இயேசுவுக்கு யோவான் ஞானஸ்நானம் கொடுக்கிறார். இயேசு தண்ணீரிலிருந்து வெளியே வந்ததும், வானங்கள் திறக்கப்படுவதையும், பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல அவர்மீது இறங்குவதையும் காண்கிறார். பரலோகத்திலிருந்து தேவன் பேசி, 'நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன்' எனறு சொல்வதைக் கேட்கிறார். மாற்கு 1:11.

இயேசுவின் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை இந்நிகழ்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியானவரும் அங்கே இருக் கிறார்கள்; இயேசுவினுடைய ஊழியம் துவங்கியதை உறுதிப்படுத்துகிறார்கள். இந்நிகழ்வின் முக்கியத்துவம் மாற்கு 15இன் கல்வாரிக் காட்சியில் பிரதிபலிக் கிறது. ஞானஸ்நானத்தின் அதே கூறுகள் பல கல்வாரிக் காட்சியில் மீண்டும் நிகழ் கின்றன.

ஆவியானவர் இயேசுவை வனாந்தரத்திற்கு 'போகும்படி ஏவினார்'. 'போகும்படி ஏவுதல்' என்பதற்கான கிரேக்க வார்த்தை **எக்பல்லோ**; இந்த வார்த்தை பொதுவாக, பிசாசுகளைத் துரத்துவதற்கு மாற்கு சுவிசேஷத்தில் பயன் பட்டுள்ளது. எனவே பரிசுத்த ஆவியானவர் அங்கே இருந்தார் என்பது, இயேசு வின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையை எடுத்துக் காட்டுகிறது. கர்த்தர் தம் ஊழியப்பயணத்தைத் தொடங்கியிருந்த நிலையில், உடனடியாக சாத்தானை எதிர்கொள்கிறார். அந்தப் போராட்டம் எப்படிப்பட்டது என்பது 40 நாள் சோதனையிலும், காட்டுமிருகங்களின் மத்தியில் சஞ்சரித்ததிலும், தூதர்கள் இயேசுவுக்கு பணிவிடை செய்த்திலும் விளங்குகிறது.

மாற்கு எழுதின சுவிசேஷத்தின் ஆரம்பக்காட்சியில் வருகிற விநோதமான ஒரு விஷயம், தெய்வீகத்தன்மையும் மனிததன்மையும் உடையவராக இயேசு காட்டப்படுவதுதான். தெய்வீகத் தன்மையைப் பார்ப்போம்: அவர் மேசியா வாகிய கிறிஸ்து. மாற்கு 1:1. ஒரு தூதனால் அறிவிக்கப்பட்ட கர்த்தர். மாற்கு 1:2,3. யோவானைவிட பெரியவர். மாற்கு 1:7. நேசகுமாரன், அவர்மீது ஆவி யானவர் இறங்குகிறார். மாற்கு 1:10,11. மனித தன்மையையும் பார்ப்போம்: யோவானால் ஞானஸ்நானம் பெற்றார்; அவர் யோவானுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. மாற்கு 1:9. ஆவியானவரால் நடத்தப்பட்டார். மாற்கு 1:12. சாத்தானால் சோதிக்கப்பட்டார்; காட்டு மிருகங்களின் நடுவே சஞ்சரித்தார்; தேவதூதர்கள் அவருக்கு பணிவிடை செய்தார்கள். மாற்கு 1:13.

ஏன் இந்த வேறுபாடுகள்? இவை எல்லாம் கிறிஸ்துகுறித்த ஆச்சரியமான எதார்த்தங்கள்; அவர் நம் கர்த்தர், நம் தேவன், அதே சமயம் ஒரு மனிதர், நம் சகோதரர், நமது முன்மாதிரி. இந்தக் கருத்தை நாம் எவ்வாறு முற்றிலும் புரிந்து கொள்ள முடியும்? நம்மால் முடியாது. ஆனால் அதை விசுவாசத்தால் ஏற்றுக் கொள்கிறோம்; மனிதர்மீது தேவன் காட்டுகிற அன்புபற்றி நமக்குக் கிடைக்கிற வெளிப்பாட்டை நினைத்து ஆச்சரியமடைகிறோம்.

---

**இயேசு தேவனாக இருந்தும், நம்மை இரட்சிக்கும்படி நம் மனித தன்மையைத் தரிக்க அவர் முன்வந்தார் என்பது தேவனுடைய ஆச்சரிய அன்புபற்றி என்ன சொல்கிறது?**


# இயேசுவின் சுவிசேஷம்

**இயேசு பிரசங்கித்த சுவிசேஷச் செய்தியின் மூன்று பகுதிகள் யாவை? மாற்கு 1:14,15.**

இயேசுவின் எளிய, நேரடி செய்திகளை மாற்கு இங்கே சுருக்கமாகச் சொல்லுகிறது. அதன் மூன்று பகுதிகள் கீழே அட்டவணையில் விளக்கப்பட்டுள்ளன:

| பிரிவு | உள்ளடக்கம் |
|---|---|
| காலத்தீர்க்கதரிசனம் | காலம் நிறைவேறியது. |
| உடன்படிக்கை வாக்குறுதி | தேவனுடைய ராஜ்யம் சமீபித்திருக்கிறது. |
| சீடத்துவத்திற்கான அழைப்பு | மனந்திரும்பி, சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். |

இயேசு குறிப்பிடுகிற காலத் தீர்க்கதரிசனமானது தானியேல் 9:24-27இன் 70-வாரத் தீர்க்கதரிசனம். இந்தத் தீர்க்கதரிசனம் இயேசுவின் ஞானஸ்நானத்தில் நிறைவேறியது; அப்போது அவர் பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பண்ணப்பட்டு, தம் ஊழியத்தைத் தொடங்கினார். அப் 10:38. இந்த அற்புதமான 70 வாரத் தீர்க்கதரிசனமானது பின்வரும் அட்டவணையில் விளக்கப்பட்டுள்ளது:




இந்தத் தீர்க்கதரிசனத்தில், ஒரு நாள் என்பது ஒரு வருடத்தைக் குறிக்கிறது (எண் 14:34; எசே 4:6). இந்தத் தீர்க்கதரிசனம் 457 இல், எருசலேமை திரும்ப எடுத்துக்கட்டி முடிப்பதற்கு பெர்சியாவின் அர்தசஷ்டா ராஜா கட்டளை பிறப்பித்தபோது தொடங்கியது (பார்க்க எஸ்றா 7).

அறுபத்தொன்பது தீர்க்கதரிசன வாரங்கள் கி.பி. 27 இல் முடிகின்றன; அப்போதுதான் இயேசு ஞானஸ்நானம் பெற்று, தம் ஊழியத்தின் தொடக்கத்தில் பரிசுத்த ஆவியால் அபிஷேகம் செய்யப்பட்டார். அதன் பிறகு மூன்றரை வருடங்கள் கழித்து சிலுவையில் அறையப்படவிருந்தார். இறுதியாக, எழுபதாம் வாரம் கி.பி. 34 இல் முடிவடையவிருந்தது; அப்போது ஸ்தேவான் கல்லெறிந்து, கொல்லப்பட்டார்; சுவிசேஷம் யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் செல்ல ஆரம்பித்தது.

---

**70 வார தீர்க்கதரிசனத்தை கடைசியாக எப்போது ஆராய்ந்தீர்கள்? இந்தத் தீர்க்கதரிசனத்தை அறிந்துகொள்வது, இயேசுவின்மீது மட்டுமல்ல, தீர்க்கதரிசன வார்த்தையின் நம்பகத்தன்மையிலும் விசுவாசத்தை அதிகரிக்க எவ்வாறு உதவும்?**

# மேலும் படிக்க:

வெளி 14:6,7இன் முத்தூது, மாற்கு 1:15இல் சொல்லப்படுகிற இயேசுவின் சுவிசேஷச் செய்திக்கு ஒத்திருக்கிறது.

முதலாம் தூதன், இரண்டாம் வருகைக்கு உலகத்தை ஆயத்தம்பண்ணும்படி, கடைசி நாட்களில் நித்திய சுவிசேஷத்தை உலகத்திற்குக் கொண்டுவருகிறான். இயேசுவின் செய்தியைப் போலவே, தூதன் சொன்ன கடைசிக்கால சுவிசேஷத்திலும் அதே மூன்று கூறுகள் உள்ளன; கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளன:

| மாற்கு 1 | பிரிவு | வெளிப்படுத்தல் 14 |
|---|---|---|
| காலம் நிறைவேறியது. தானியேல் 9. | காலத் தீர்க்கதரிசனம் | நியாயத்தீர்ப்புக் கொடுக்கிற வேளை. தானியேல் 7;8 |
| ராஜ்யம் சமீபித்திருக்கிறது | உடன்படிக்கை வாக்குறுதி | நித்திய சுவிசேஷம் |
| மனந்திரும்புங்கள், விசுவாசியுங்கள் | சீடத்துவத்திற்கு அழைப்பு | பயப்படுங்கள், மகிமைப்படுத்துங்கள், தேவனைத் தொழுங்கள் |

முதல் தூதனின் தூது, வருகைக்கு முந்தைய நியாயவிசாரணையை அறிவிக்கிறது; அது 1844 இல் தொடங்கியது; தானி 8:14 இன் 2,300 இராப்பகல் தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்டது. நியாயத்தீர்ப்பால் உபத்திரவமடைந்த தேவமக்கள் தேவனுடைய ராஜ்யத்தைப் பெறுகிறார்கள். தானி 7:22. பயப்படுங்கள், மகிமைப்படுத்துங்கள், தேவனைத் தொழுதுகொள்ளுங்கள் என்று கொடுக்கப்படுகிற முதலாம் தூதனுடைய அழைப்பு, சீடத்துவத்திற்கான அழைப்பு; வெளி 13இன் மிருக வல்லமைகள் கடைசி நாட்களில் ஒரு பொய்யான கடவுளுக்குப்பயந்து, அதை மகிமைப்படுத்தவும் தொழவும் சொல்லும்போது கொடுக்கப்படுகிறது.

சுவிசேஷ அறிவிப்பு துவங்கின காலத்தில், மாற்கு 1இன் இயேசுவின் செய்தியானது தானியேல் தீர்க்கதரிசனத்தோடு தொடர்புடையதாக இருந்தது போலவே, உலக வரலாற்றின் முடிவில் அறிவிக்கப்படுகிற முதல் தூதும் தானியேல் தீர்க்கதரிசனங்களுடன் தொடர்புடையதாக இருக்கிறது.

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *மாற்கு 1:1-13இல் இயேசுவையும் யோவான் ஸ்நானனையும் ஒப்பிட்டு ஆராயுங்கள். அவர்கள் அறிமுகப்படுத்தப்படுகிற விதத்திலிருந்து என்ன விசேஷித்த பாடங்களைப் படிக்கமுடிகிறது?*

2. *ஞானஸ்நானத்தின் அர்த்தம் என்ன? ரோமர் 6:1-4; யோவான் 3:1-8 ஐ வாசித்து, மாற்கு 1:9-13 இலுள்ள இயேசுவின் ஞானஸ்நானத்துடன் ஒப்பிடுங்கள். என்ன ஒற்றுமைகளையும் வேற்றுமைகளும் உள்ளன? ஞானஸ்நானத்தின் அர்த்தம்பற்றி இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ள இது எவ்வாறு உதவுகிறது?*

3. *மாற்கு 1:14,15இல் இயேசுவின் சுவிசேஷத்தையும், வெளி 14:6,7இல் முதலாம் தூதனுடைய செய்தியையும் ஒப்பிட்டு ஆராயுங்கள். இந்தச் செய்திகளை ஆராய்வது, இன்று நீங்கள் சிறப்பாக ஊழியம்செய்ய எவ்வாறு உதவும்?*

# பீதியடைந்த ஷாமன், பகுதி 1

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

நேபாளத்தில் அந்தத் தந்தை பிரபலமானவர். எல்லாரும் அவரிடம் உதவிகேட்டு வருவார்கள். தங்களுக்காக அவர் மிருகங்களைப் பலியிட்டால் எப்படிப்பட்ட நோயும் குணமாகுமென நம்பினார்கள். அவர் ஷாமன் பரம்பரையைச் சேர்ந்தவர்; ஷாமனான தன் அப்பாவுக்கு பிறகு ஷாமனானார். ஆவியுலக சடங்குகளைச் செய்வதில் தனக்கு மிஞ்சி ஆளில்லை என்று நினைத்தார். ஆனால் தான் அதிகம் நேசித்த தன் மனைவிக்கு தன்னால் உதவமுடியாமல் ஆனபோது, திகைத்துவிட்டார். நோயைக் கண்டுபிடிக்கவோ குணமாக்கவோ முடியவில்லை.

அவர்களுடைய மூத்த மகள் திவ்யா, அம்மாவுக்கு உதவிசெய்ய வீட்டிற்கு வந்திருந்தாள். ஒருநாள் அப்பா வீட்டிற்கு வந்த சமயத்தில், அம்மாவையோ திவ்யாவையோ காணவில்லை. தேடினார். மேல் மாடியில் அவர்கள் முழங்கால்படியிட்டு, கண்ணுக்குத் தெரியாத யாரோ ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பா பீதியடைந்தார். ஏதோ தவறு நடப்பதாகச் சந்தேகித்தார். ஆனால் அவர்களுக்கு இடையூறு செய்யாமல் அங்கிருந்து சத்தமின்றி சென்றார். தன்னைப்போல தன் மகளும் தனக்குத் தெரியாமல் ஷாமனாக மாறிவிட்டாளோ என்று யோசித்தார். பிறகு, திவ்யாவைப் பார்த்தபோது அதுபற்றி விசாரித்தார்.

“அம்மாவைக் குணமாக்கும்படி என் கடவுளிடம் பிரார்த்தனை செய்தோம்” என்று திவ்யா சொன்னாள்.

“எந்தக் கடவுள்?” என்று அப்பா கேட்டார். அவர் பல கடவுள்களை வழிபட்டார்.

“என் கடவுள் இயேசுவிடம். நம் குடும்ப மதத்தை விட்டுவிட்டேன். இயேசுவில் ஒரு புதிய தெய்வத்தைக் கண்டுகொண்டேன்” என்று சொன்னாள். அவர் வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்தவரென விளக்கினாள். “ஜெபத்தைக் கேட்டு, அம்மாவைக் குணமாக்குவார்” என்றாள்.

அப்பாவுக்கு நம்ப முடியவில்லை. தன் குடும்ப கடவுள்களைவிட இந்தக் கடவுள் சக்தி வாய்ந்தவரா என்று யோசனையாக இருந்தது.

திவ்யா இன்னொரு நகரத்தில் வசித்துவந்தாள். அங்கு செல்ல வேண்டியிருந்ததால், அம்மாவை தன்னோடு அழைத்துச் செல்ல அப்பாவிடம் கேட்டாள். அப்பா ஒரு ஷாமனாகவும், கட்டுமானப் பணியாளராகவும் வேலை செய்ததால், அதற்குச் சம்மதித்தார். அவரால் தன் மனைவிக்கு உதவிசெய்ய முடியவில்லை; அவர் பிழைப்பார் என்றும் நம்பவில்லை.

“அம்மா இறந்தால் எனக்குத் தெரியப்படுத்து” என்று சொன்னார்.

ஆறு மாதங்கள் தன் மனைவியை அவர் பார்க்கவே இல்லை. பிறகு திவ்யாவின் வீட்டிற்குச் சென்றபோது, தன் மனைவி ஆரோக்கியமாக இருந்த்தைப்பார்த்து ஆச்சரியமடைந்தார். அவருக்குள் பல கேள்விகள் எழுந்தன. “உன் அம்மா எப்படி குணமானாள்? அவளுக்கு என்ன மருந்து கொடுத்தாய்?” என்று திவ்யாவிடம் கேட்டார்.

தான் தேவனிடம் ஜெபிக்க மட்டுமே செய்ததாக திவ்யா சொன்னாள்.

அப்பாவுக்கு நம்ப முடியவில்லை. சிரித்தார். மிருக பலியோ சடங்கோ இல்லாமல் குணமாக்குகிற எந்தக் கடவுள்பற்றியும் அவர் கேள்விப்பட்டதே இல்லை.